# தமிழகத்தில் செயின்ட் கோபைன் ரூ.3,400 கோடி முதலீடு: நல்லாட்சிக்கான அத்தாட்சி என முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்




**சென்னை:** ஒரகடம், ஸ்ரீபெரும்புதூர், பெருந்துறை, திருவள்ளூரில் பிரான்ஸ் நாட்டின் செயின்ட் கோபைன் நிறுவனம் ரூ.3,400 கோடி முதலீடு செய்கிறது. தமிழகத்தில் நல்லாட்சி, சிறப்பான முதலீட்டு சூழல் அமைந்திருப்பதற்கான அத்தாட்சியாகவே இதை கருதுகிறேன் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த செயின்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர், தலைமை செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் உள்ளிட்ட இயக்குநர்கள் குழுவினரை சென்னையில் முதல்வர் ஸ்டாலின் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். அப்போது, அவர் பேசியதாவது:

தமிழகத்துக்கும், செயின்ட் கோபைன் நிறுவனத்துக்குமான உறவு சுமார் 25 ஆண்டு வரலாறு கொண்டது. ஸ்ரீபெரும்புதூரில் இந்நிறுவனத்துக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி கடந்த 1998 ஜனவரியில் அடிக்கல் நாட்டினார். தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூர், பெருந்துறை, திருவள்ளூரில் செயின்ட் கோபைன் நிறுவனம் பல்வேறு தொழில் திட்டங்களை நிறுவி, சுமார் ரூ.5,000 கோடி முதலீடு செய்து,

5,000 பேருக்கு வேலைவாய்ப்பும் அளித்துள்ளது. தனது ஆராய்ச்சி, மேம்பாட்டு திட்டத்தையும் சென்னையில் அமைத்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் 9-ம் தேதி ஸ்ரீபெரும்புதூரில் உள்ள நிறுவனத்தில் மிதவை கண்ணாடி பிரிவு, ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவு, நகர்ப்புற வனம் ஆகியவற்றை தொடங்கிவைத்து பார்வையிட்டேன். தற்போது இந்நிறுவனம் ஒரகடத்தில் ஒரு புதிய உற்பத்தி திட்டமும், பெரும்புதூர், பெருந்துறை, திருவள்ளூர் திட்டங்களில் விரிவாக்கமும் மேற்கொள்ள உள்ளது. தமிழகத்தில் நல்லாட்சி மற்றும் சிறப்பான முதலீட்டு சூழல் அமைந்திருப்பதற்கான அத்தாட்சியாகவே இதை கருதுகிறேன்.

சுமார் ரூ.3,400 கோடி முதலீடு, 1,150 பேருக்கு வேலைவாய்ப்பு என மேற்கொள்ளப்படும் இத்திட்டத்துக்கான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு செய்யும் என்று உறுதி அளிக்கிறேன். உங்கள் தொழில் முயற்சிகள் வெற்றி பெற மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் அனைவரையும் சென்னையில் சந்தித்தது மிக்க மகிழ்ச்சி.

## தமிழர்களின் கடல்சார் தொன்மையை வெளிகொணர்ந்த வரலாற்று ஆய்வாளர் ஒரிசா பாலு மறைவு



**சென்னை**: கடலியல் தமிழ்சார் வரலாற்று ஆய்வாளர் ஒரிசா பாலு காலமானார். அவருக்கு வயது 60. திருச்சி உறையூரில் பிறந்த இவரின் உண்மையான பெயர் சிவ பாலசுப்ரமணியன். பல ஆண்டுகள் ஒரிசாவில் பணிபுரிந்ததால் ஒரிசா பாலு என அழைக்கப்பட்டார். தமிழர்களின் கடல்சார் தொன்மை தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்ட இவர், தமிழர் வரலாற்றின் மரபுசார் அறிவை நவீன தொழில்நுட்பங்கள் மூலமாக வெளிக்கொண்டு வந்தார். ஆமைகள் மூலம் நீரோட்டத்தை அறிந்து, பழங்கால தமிழர்கள் கடற்பயணம் மேற்கொண்டதை கண்டறிந்தவர் இவர்தான்.

மேலும், குமரிக்கண்டம், கடலில் மூழ்கிய பூம்புகார் உள்ளிட்ட கடல் சார்ந்த ஆய்வுகளில் இவரது பங்களிப்பு மிக முக்கியமானதாக அறியப்படுகிறது. இதனிடையே, புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் அதற்கான சிகிச்சை பெற்றுவந்தார். இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவரின் மறைவு வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

“பண்டைய கால தமிழர்களின் கடல் அறிவை உலகுக்கு வெளிப்படுத்திய கடல்வழி ஆராய்ச்சியாளரும், தமிழ்சார் ஆய்வாளருமான ஒரிசா பாலு, உலக வரலாற்றில் தமிழர்களின் மதிப்பை உயர்த்துவதற்காக பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர். அவரது மறைவு பேரிழப்பு” என சமூக வலைதளங்களிலும் அஞ்சலிக் குறிப்புகள் பகிரப்பட்டு வருகின்றன.

கடந்த 2020-ல் பெரும்பாக்கம் அரசு கல்லூரியில் ஒரிசா பாலு பேசியதன் சிறிய தொகுப்பு: "தமிழர்கள் பண்டைக் காலம் தொட்டே நாகரிக வளர்ச்சி அடைந்தவர்கள். தங்களது வணிகத்தின் மூலமாகவும் படையெடுப்புகளின் வாயிலாகவும் பல நாடுகளுக்குப் பரவி இருக்கிறார்கள். அங்கெல்லாம் தமிழ் அடையாளத்தை பதித்திருக்கிறார்கள். அந்த வகையில் பல சுவடுகள் நமக்கு

கிடைத்திருக்கின்றன. குறிப்பாக, உலகின் பல நாடுகளில் பல ஊர்ப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக உள்ளன. பல பழங்குடி இனங்கள் பண்டைய தமிழ்ச் சொற்களை அப்படியே பயில்கிறார்கள்.

நாம் மறந்து போன சங்ககால சொற்களை அவர்கள் இன்னமும் பயன்படுத்துகிறார்கள். பண்டைத் தமிழரின் கடல் அறிவு என்பது மிகவும் வியக்கத்தக்கது. பல்வேறு வகையான கப்பல்களை பண்டைக் காலம் தொட்டே தமிழர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். கடலின் நீரோட்டம் அறிந்து கலங்களை செலுத்தி இருக்கிறார்கள். கடல்வாழ் உயிரினமான ஆமைகள் கண்டம் விட்டு கண்டம் இடம்பெயரும் வழித்தடங்களை அறிந்து கடல் பயணத்துக்காக அந்த தடங்களை பயன்படுத்தி இருக்கக்கூடும் என்று தெரியவருகிறது. ஆழ்கடலில் நான் பல இடங்களில் ஆய்வு செய்து இருக்கிறேன்.

தரையில் இருக்கும் பண்டைய தமிழரின் சுவடுகளைவிட கடலில் தமிழர்களின் சுவடுகள் அதிகமாக இருக்கக்கூடும். அவற்றை இன்னும் விரிவாக ஆய்வு செய்து வெளிக்கொணர வேண்டும். நமது மரபுச் செல்வங்களை மீட்டெடுக்க வேண்டும்."

## டெங்கு கொசுக்களை கட்டுப்படுத்த நீர்தேங்கும் இடங்களில் கம்பூசியா மீன் வளர்க்க திட்டம் @ புதுச்சேரி



கம்பூசியா மீன்

**புதுச்சேரி:** புதுவையில் டெங்கு கொசுக்களைகட்டுப்படுத்த, நீர் தேங்குமிடங்களில் கம்பூசியா மீன் வளர்க்கும் திட்டத்தை மீன்வளத்துறையுடன் இணைந்து சுகாதாரத்துறை செயல்படுத்த உள்ளது.

புதுவை மாநிலத்தில் கடந்த ஜனவரி முதல் அக்டோபர் வரையில் 1,421 பேருக்கு டெங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதில் 71 பேர் தீவிர டெங்கு பாதிப்புக்கு உள்ளாகினர். அவர்களில் 2 பேர் மட்டும் உயிரிழந்தனர். கடந்த ஜனவரியில் 294 பேருக்கு பாதிப்பிருந்த நிலையில், செப்டம்பரிலும் 269 பேருக்கு பாதிப்பிருந்தது.

அக்டோபரில் 21 பேருக்குமட்டுமே டெங்கு பாதிப்பு இருந்தது. புதுவை மாநில அளவில் நேற்று முன்தினம் மட்டும் புதுவை பிராந்தியத்தில் 39 பேரும், காரைக்காலில் 6 பேரும் என 45 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 32 பேர் உள்நோயாளிகளாக சிகிச்சைபெறுகின்றனர். கடந்த ஆண்டு டெங்குவால் 1,673 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிக்குன் குனியாவை பொறுத்த வரையில் கடந்த ஜனவரி முதல் தற்போது வரை 73 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு 150 பேருக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருந்தனர். நடப்பாண்டில் சிக்குன் குனியா குறைந்துள்ளது.

டெங்குவை கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சுகாதாரத்துறை இயக்குநர் ஸ்ரீராமுலுவிடம் கேட்டதற்கு, “டெங்குவை பரப்பும் கொசுக்கள் நல்ல தண்ணீரிலேயே முட்டையிட்டு பெருகுகின்றன. ஆகவே, பொதுமக்கள் தண்ணீரை தேங்கவிடாமல்இருப்பது அவசியம்.மருந்து தெளிப்பதால் கொசுக்கள் மயக்கமடையும்.

ஆகவே, கொசு உற்பத்தியை தடுப்பதே டெங்கு பாதிப்பை குறைக்கும் வழியாகும். அதற்காக கொசு லார்வாவை உண்டு வாழும் கம்பூசியா வகை மீன்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. புதுவை மீன் வளத்துறையுடன் இணைந்து கம்பூசியா வகை மீன்களை வளர்க்க உள்ளோம். கம்பூசியா வகை மீன்கள் நல்ல தண்ணீர் உள்ள கிணறுகள் உள்ளிட்டவற்றில் விடப்பட்டு கொசுக்களது லார்வாக்கள் அழிக்கப்படவுள்ளன” என்றார்.

கம்பூசியா மீன்கள் தொடர்பாக பூச்சியியல் துறை தரப்பில் விசாரித்தபோது, “டெங்கு உள்ளிட்ட காய்ச்சல்களுக்கு காரணகர்த்தாவான கொசுக்களின் லார்வாக்களை சாப்பிடும் தன்மை கொண்டவை கம்பூசியா மீன்கள். 5 செ.மீ. நீளம் வரை மட்டுமே வளரும்.டெங்கு கொசுக்களை இயற்கை வழியில் இந்த மீன்கள் அழித்துவிடும்.

இந்த வகை மீன்களை மேட்டூர் அணைப் பகுதியில் வளர்த்தெடுக்கிறார்கள். அங்கிருந்து வாங்கி தரலாம். அலங்கார தொட்டிகள், அலங்கார நீரூற்றுகள், நன்னீர் குடுவைகளில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் வாய்ப்புகள் அதிகம். எனவே அவற்றில் விட இந்த வகை மீன்களை தரலாம். குளோரினேஷன் செய்யப்படும் நீரில் இந்த மீன்கள் வாழாது.மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் வாழாது.

கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இவற்றை விட்டால் கொசுப் புழுக்கள் உருவாகாமல் தடுக்க முடியும். நன்னீர் தேக்கி வைக்கப்படும் அனைத்து பகுதிகளுக்கும் இந்த வகை மீன்களை கொண்டு சென்று வளர்த்து கொசுக்களை இயற்கையாகவே கட்டுப்படுத்தலாம்” என்று குறிப்பிட்டனர்.

## சிக்கிம் வெள்ளப் பெருக்கு | உயிரிழந்தோர் எண்ணிக்கை 56 ஆக அதிகரிப்பு; நூற்றுக்கும் மேற்பட்டோர் மாயம்



**சிக்கிம்:** வடக்கு சிக்கிமில் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளது. காணாமல் போன நூற்றுக்கும் மேற்பட்டோரை தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிக்கிம் மாநிலத்தில் கடந்த 3ம் தேதி இரவு கனமழை பெய்தது. இதையடுத்து, வடக்கு சிக்கிம் பகுதியில், நேபாள எல்லை அருகே உள்ள லோனக் ஏரி பகுதியில் மேகவெடிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக, சிக்கிம் மற்றும் மேற்கு வங்கம் வழியாக வங்கதேசத்தில் பாயும் தீஸ்தா நதியில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இதனால், லச்சன் பள்ளத்தாக்கு பகுதியில், தீஸ்தா நதியின் குறுக்கே உள்ள நடைபாலம் உள்பட 13 பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. சிக்கிம் - மேற்குவங்கத்தை இணைக்கும் நெடுஞ்சாலைகள் உள்பட பல்வேறு

சாலைகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. கரையோரத்தில் இருந்த ராணுவ முகாமும் வெள்ளத்தில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டது. வெள்ளத்தில் சிக்கிய 23 ராணுவ வீரர்கள் மற்றும் இப்பகுதி மக்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமல் போயினர். ஆயிரத்து 200 வீடுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ராணுவ முகாமும், அதில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ராணுவத் தளவாடங்களும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில், காணாமல் போன பலரது உடல்கள் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதை சிக்கிம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் நேற்று உறுதிப்படுத்தியது. 142 பேரை காணவில்லை என்றும் அது கூறியது. சிக்கிமின் மான்கன் மாவட்டத்தில் 4 பேரின் உடல்களும், காங்டாக்கில் 6 பேரின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதோடு, 7 ராணுவ வீரர்களின் உடல்கள் உள்பட 16 பேரின் உடல்கள் பாக்யாங் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. காணாமல் போனவர்களை தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தீஸ்தா நதி பாயும் மேற்கு வங்கத்தின் சிலிகுரி, ஜல்பைகுரி, கூச் பெஹார் மாவட்டங்களில் இருந்து 30 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது. இதன்மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமல் போன நிலையில் அவர்களை தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## விவசாயிகளின் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன்



எம். எஸ். சுவாமிநாதன்

பேராசிரியர் எம். எஸ். சுவாமிநாதனை ஒரு சில நாட்களுக்கு முன் இழந்துவிட்டோம். புரட்சிகரமான தொலைநோக்குப் பார்வை கொண்ட வேளாண் விஞ்ஞானியை நமது நாடு இழந்துவிட்டது. இந்தியாவுக்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கிய அவரது நினைவுகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். இந்தியாவை நேசித்த பேராசிரியர் எம். எஸ். சுவாமிநாதன் நமது நாடு, குறிப்பாக நமது விவசாயிகள் வளமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். கற்பதில் சிறந்து விளங்கிய அவர், எந்தத் துறையையும் தேர்வு செய்திருக்க முடியும், ஆனால், 1948-ம் ஆண்டின் வங்கப் பஞ்சத்தால் ஏற்பட்டதாக்கம் காரணமாக ஏதாவது ஒன்றை நாம் செய்ய வேண்டும் என்றால் அது வேளாண் துறை படிப்பாகத்தான் இருக்க முடியும் என்பதில் தெளிவாக இருந்தார்.

அவருக்கு 1950-ஆம் ஆண்டு அமெரிக்காவில் பேராசிரியர் பதவி தேடிவந்தது. ஆனால், அவர் இந்தியாவுக்காக பணியாற்றவே அவர் விரும்பினார். சுதந்திரம்

அடைந்தபின், முதல் 20 ஆண்டுகளில் நாம் எதிர்கொண்ட பல சவால்களில் உணவுப் பற்றாக்குறை முதன்மையானதாக இருந்தது. 1960-களின் முற்பகுதிகளில் பஞ்சத்தின் அச்சுறுத்தல் இருந்தது. பேராசிரியர் சுவாமிநாதனின் சமரசமற்ற உறுதிப்பாடும் தொலைநோக்குப் பார்வையும் வேளாண் வளத்திற்கான புதிய சகாப்தம் பற்றி சிந்திக்க வைத்தது. வேளாண் துறையில் குறிப்பாக கோதுமை உற்பத்தியில் முன்மாதிரியான அவரின் பணிகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை உறுதி செய்தது. இதைத்தொடர்ந்து இந்தியா உணவுப்பற்றாக்குறை நாடு என்ற நிலையில் இருந்து உணவில் தற்சார்புள்ள நாடு என மாறியது. இந்த மகத்தான சாதனையால் "இந்தியபசுமைப்புரட்சியின் தந்தை" என்ற பட்டம் அவருக்கு மிகவும் பொருத்தமாக அமைந்தது.

இந்தியாவால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு பசுமைப் புரட்சி எடுத்துக்காட்டாக இருந்தது. பசுமைப் புரட்சி தொடங்கிய 50 ஆண்டுகளுக்குப் பின்தற்போது இந்திய வேளாண் துறை,அதிநவீனமாகவும், முற்போக்கானதாகவும் மாறியிருக்கிறது. ஆனால், இதற்குஅடித்தளமிட்ட பேராசிரியர் சுவாமிநாதனை ஒரு போதும் மறக்கவியலாது.

உருளைக் கிழங்கு பயிர்களை தாக்கிய பாரசைட்ஸ் பற்றிய ஆய்வை அவர்பல ஆண்டுகள் மேற்கொண்டார். இதன்பயனாக உருளைக் கிழங்கு பயிர் குளிர்ச்சியான காலநிலையையும் தாங்கவல்லதாக மாறியது. தற்போது மிகச் சிறந்த உணவாக சிறுதானியங்கள் பற்றிஉலகமே பேசுகிறது. ஆனால், பேராசிரியர் சுவாமிநாதன் 1990-களில் தொடங்கி சிறுதானியங்கள் பற்றிய கருத்தை ஊக்கப்படுத்தினார்.

பேராசிரியர் சுவாமிநாதனுடன் எனதுதனிப்பட்ட உரையாடல்கள் மிகவும் பரந்து விரிந்த தன்மை கொண்டது. 2001-ஆம் ஆண்டு குஜராத் முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற பின் இந்தகலந்துரையாடல்கள் தொடங்கின. இந்தநாட்களில் வேளாண்மையின் வலிமையை குஜராத் அறிந்திருக்கவில்லை. தொடர்ச்சியான வறட்சி, கடுமையான புயல், நிலநடுக்கம் போன்றவற்றால் இம்மாநிலத்தின்

வளர்ச்சிப் பயணம் தடைபட்டது. நாங்கள் தொடங்கிய பல முன்முயற்சிகளில் ஒன்றாக மண்வள அட்டைத் திட்டம் இருந்தது. நிலத்தைப் பற்றி நன்றாகப் புரிந்துகொள்ளவும் பிரச்னைகளை சரி செய்யவும் இது எங்களுக்கு உதவியது. இந்தத் திட்டம் தொடர்பாக பேராசிரியர் சுவாமிநாதனை நான்சந்தித்தேன். இந்தத் திட்டத்தைப் பாராட்டிய அவர், தமது கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டார். இதன் பயனாக குஜராத் வேளாண் துறையின் வெற்றி சாத்தியமானது.

நான் முதலமைச்சராக இருந்தபோதும் பின்னர் பிரதமராக பொறுப்பேற்ற போதும் எங்களின் உரையாடல்கள் தொடர்ந்தன. 2016-ஆம் ஆண்டு சர்வதேச வேளாண் பல்லுயிர் பெருக்க மாநாட்டில் நான் அவரை சந்தித்தேன். அடுத்த ஆண்டு 2017-ல்அவரால் எழுதப்பட்ட நூலின் 2 தொகுதிகள் அடங்கிய தொகுப்பை நான் வெளியிட்டேன்.

உழவர்கள் உலகத்திற்கு அச்சாணிபோன்றவர்கள் ஏனெனில் அவர்கள்தான் அனைத்தையும் பாதுகாக்கின்றவர்கள் என்று திருக்குறள் வர்ணிக்கிறது. பேராசிரியர் சுவாமிநாதன் இந்தக் கோட்பாட்டை மிக நன்றாக உணர்ந்திருந்தார். ஏராளமான மக்கள் அவரை “வேளாண் விஞ்ஞானி” என்கிறார்கள். ஆனால், அவர் அதைவிடவும் மேலானவர் என்று நான் எப்போதும் நம்புகிறேன். உண்மையில் அவர், “விவசாயிகளின் விஞ்ஞானி”யாக இருந்தார். அவரது இதயத்தில், எப்போதும் ஒரு விவசாயி இடம் பெற்றிருந்தார். அவரது பணிகளின் வெற்றி கற்ற கல்வியால் மட்டுமே சிறந்தது என்பதாக இருக்கவில்லை. அது சோதனைச் சாலைகளுக்கு வெளியே வயல்களிலும், பண்ணைகளிலும் பெற்ற அனுபவமாக இருந்தது. அறிவியல் சிந்தனைக்கும் அதன் நடைமுறைப் பயன்பாட்டிற்கும் இடையேயான இடைவெளியை குறைப்பதாக அவரது பணி அமைந்தது. நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடிய வேளாண்மைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கிய அவர், மனிதகுல முன்னேற்றத்திற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையேயான சமச்சீர் நிலையை வலியுறுத்தினார். சிறு விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தி

கண்டுபிடிப்புகளின் பயன்கள் அவர்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதில் பேராசிரியர் சுவாமிநாதன் சிறப்பு கவனம் செலுத்தினார் என்பதை நான் குறிப்பிட வேண்டும். விவசாயத்தில் ஈடுபடும் பெண்களின் வாழ்க்கை மேம்பாடு குறித்தும் அவர் தனிப்பட்ட ஆர்வம் கொண்டிருந்தார்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் வழிகாட்டுதலில் மிகச் சிறந்த முன்னோடியாக பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் விளங்கினார். 1987-ஆம் ஆண்டுகௌரவம் மிக்க உலக உணவுப் பரிசுஇவருக்கு வழங்கப்பட்டது. இதனைப் பெற்ற முதலாவது விஞ்ஞானியாக இருந்த அவர், இதற்கான தொகையை லாப நோக்கம் இல்லாத ஆராய்ச்சி அறக்கட்டளையை நிறுவுவதற்குப் பயன்படுத்தினார். இன்று வரை இந்த அறக்கட்டளை பல துறைகளில் விரிவான பணிகளை மேற்கொண்டுவருகிறது. எண்ணற்ற சிந்தனையாளர்களை உருவாக்கி கற்றல் மற்றும் புதியகண்டுபிடிப்பு ஆர்வத்தைத் தூண்டுகிறது. விரைவாக மாறிவரும் உலகத்தில் அறிவின் ஆற்றல், வழிகாட்டுதல் மற்றும் புதிய கண்டுபிடிப்பை அவரது வாழ்க்கை நமக்கு நினைவூட்டுகிறது. மணிலாவில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக பதவி வகித்தது இவரது மிகச் சிறந்த பணிகளில் ஒன்றாகும். இதன் தெற்காசிய பிராந்திய மையம் 2018-ல் வாரணாசியில் திறக்கப்பட்டது.

டாக்டர் சுவாமிநாதனுக்கு புகழாரம் சூட்டும் திருக்குறளை மீண்டும் ஒருமுறை நான் குறிப்பிடுகிறேன். “எண்ணிய, எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியராகப் பெறின்” தமது இளமைக் காலத்தில் வேளாண்மையை வலுப்படுத்தி விவசாயிகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்று முடிவு செய்த அவர், அந்த பாதையிலேயே உறுதியுடன் செயல்பட்டார். அந்தப் பணியை அவர் வெகு சிறப்பாகவும் புதுமைச் சிந்தனையோடும், ஆர்வத்தோடும் மேற்கொண்டார். வேளாண் துறையில்புதிய கண்டுபிடிப்பையும், நிலைத்தன்மையையும் நாம் முன்னெடுக்கும் போது டாக்டர் சுவாமிநாதனின் பங்களிப்பு தொடர்ந்து நமக்கு ஊக்கமளிக்கும், வழிகாட்டும்.

## ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த மாநில அரசுக்கு உரிமை இருக்கிறதா? - பிஹார் அரசு பதில் அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு



கோப்புப்படம்

**புதுடெல்லி:** பிஹாரில் ஜாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான கூடுதல் விவரங்களை வெளியிட தடையில்லை என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கடந்த 1931-ம் ஆண்டில் ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் வெளியிடப்பட்டன. அதன் அடிப்படையில் நாடு முழுவதும் இடஒதுக்கீடு பின்பற்றப்படுகிறது.

அதன்பிறகு கடந்த 2011-ம் ஆண்டில் காங்கிரஸ் கூட்டணி அரசு சமூக பொருளாதார மற்றும் ஜாதி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தியது. இந்த கணக்கெடுப்பின் முழு விவர அறிக்கை கடந்த 2014-ல் தயாரானது. அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த சூழலில் பிஹாரில் ஆட்சி நடத்தும் ஐக்கிய ஜனதா தளம், ராஷ்டிரிய ஜனதா தளம் கூட்டணி அரசு சார்பில் கடந்த 2022-ம் ஆண்டு ஜூனில் ஜாதிவாரி கணக்கெடுப்பு தொடங்கப்பட்டது.

இதை எதிர்த்து பிஹார் உயர் நீதிமன்றத்தில் 8 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை கடந்த ஆகஸ்ட் 1-ம் தேதி உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு இடைக்கால தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது.

கடந்த 2-ம் தேதி பிஹார் அரசு ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களை வெளியிட்டது. இதில், மாநிலத்தில் 63.14 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட சமூகங்களை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. பொதுப்பிரிவினர் 15.52%, தலித் மக்கள் 19.65%, பழங்குடியினர் 1.69 % பேர் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த பின்னணியில் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, எஸ்.வி.என்.பட்டி அமர்வு முன்பு வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் அபர்ஜிதா சிங் கூறும்போது, "மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த மத்திய அரசுக்கு மட்டுமே உரிமை இருக்கிறது. மாநில அரசுகளுக்கு உரிமை இல்லை'' என்று வாதிட்டார்.

பிஹார் அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஷியாம் திவான் கூறும்போது, "பிஹார் அரசு சார்பில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. ஜாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வே நடத்தப்பட்டது'' என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் கூறியதாவது: மத்திய அரசோ, மாநில அரசுகளோ கொள்கை ரீதியில் எடுக்கும் முடிவுகளுக்கு தடை விதிக்க முடியாது. பிஹாரில் ஜாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான கூடுதல் விவரங்களை வெளியிட இப்போதைக்கு தடை விதிக்க முடியாது. இந்த கணக்கெடுப்பில் தனிநபரின் பெயர், விவரங்கள் வெளியிடப்படவில்லை. எனவே தனிநபரின் அந்தரங்கம் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டுவதை ஏற்க முடியாது.

ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த மாநில அரசுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பது குறித்து மட்டுமே விசாரிக்கப்படும். வழக்கின் அடுத்த விசாரணை 2024 ஜனவரிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. அதற்குள் பிஹார் அரசு விரிவான பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்

## Asian Games 2023 | வில்வித்தையில் தங்கம் வென்றார் இந்தியாவின் ஜோதி சுரேகா



ஜோதி சுரேகா

**ஹாங்சோ:** நடப்பு ஆசிய விளையாட்டுப் போட்டியில் வில்வித்தை மகளிர் தனிநபர் காம்பவுண்டு பிரிவில் தங்கம் வென்றுள்ளார் இந்தியாவின் ஜோதி சுரேகா. 149 புள்ளிகள் பெற்று தென் கொரிய வீராங்கனையை பின்தள்ளி அவர் தங்கம் வென்றார்.

19-வது ஆசிய விளையாட்டுப் போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இதுவரை இந்தியா மொத்தமாக 97 பதக்கங்களை வென்றுள்ளது. ஜோதி சுரேகா, நடப்பு ஆசிய விளையாட்டுப் போட்டியில் மட்டும் 3 தங்கப்பதக்கம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தங்கம் வெல்வதற்கான தனிநபர் போட்டியில் தொடர்ச்சியாக 4 முறை 30 செட்

புள்ளிகளை அவர் பெற்றிருந்தார். இதே பிரிவில் வெண்கலம் வென்றார் இந்தியாவின் அதிதி.

இதன் மூலம் இந்தியா 100 பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைக்க உள்ள தருணத்தை நெருங்கிக் கொண்டுள்ளது.

## Asian Games 2023 | ஹாக்கியில் தங்கம் வென்றது இந்தியா: முதல்முறையாக 100 பதக்கங்களை வென்று சாதனை படைக்கிறது



**ஹாங்சோ:** ஆசிய விளையாட்டு போட்டி ஹாக்கியில் இந்திய ஆடவர் அணி இறுதிப் போட்டியில் ஜப்பானை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது. இதன்மூலம் 2024-ம் ஆண்டு நடைபெறும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய அணி நேரடியாக தகுதி பெற்றது.

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று ஆடவர் ஹாக்கி இறுதிப் போட்டியில் இந்தியா, நடப்பு சாம்பியனான ஜப்பானை எதிர்த்து விளையாடியது. இதில் இந்திய அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றது.

இந்திய அணி சார்பில் ஹர்மன்பிரீத் சிங் 2 கோல்களும் (59 மற்றும் 32-வது நிமிடம்), அபிஷேக்(48-வது நிமிடம்), அமித் ரோஹிதாஸ் (36-வது நிமிடம்), மன்பிரீத் சிங் (25-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

ஆசிய விளையாட்டில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் 2024-ம் ஆண்டு பாரீஸ் நகரில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய ஆடவர் ஹாக்கி அணி நேரடியாக தகுதி பெற்றது.

**4-வது முறை:** ஆசிய விளையாட்டு வரலாற்றில் இந்திய ஆடவர் ஹாக்கி அணிதங்கப் பதக்கம் வெல்வது இது4-வது முறை. இதற்கு முன்பு 1966,1998, 2014-ம் ஆண்டுகளில் தங்கம் வென்றுள்ளது.

ஆசிய விளையாட்டு தொடரில் இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் 13 கோல்களை அடித்து அதிக கோல்கள் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார். இந்த தொடரில் இந்தியஅணி ஒரு ஆட்டத்தில்கூட தோல்வியை சந்திக்காமல் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

**கிரிக்கெட்டில் வெற்றி:** ஆடவருக்கான டி-20 கிரிக்கெட் அரை இறுதி சுற்றில் இந்தியா – வங்கதேசம் அணிகள் மோதின. இதில் முதலில் பேட் செய்த வங்கதேச அணியால் 9 விக்கெட்கள் இழப்புக்கு 96 ரன்களே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக அனிக் ஜா 24, இமோன் 23 ரன்கள் சேர்த்தனர். இந்திய அணி சார்பில் சாய் கிஷோர் 3, வாஷிங்டன் சுந்தர் 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

எளிதான இலக்கை விரட்டிய இந்திய அணி 9.2 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 97 ரன்கள் எடுத்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் 26 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 40 ரன்களும், திலக் வர்மா 26 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 55 ரன்களும் விளாசினர். இறுதிப் போட்டியில் இந்திய அணி, ஆப்கானிஸ்தானுடன் மோதுகிறது.

ஆசிய விளையாட்டு போட்டியின் 13-வது நாளான நேற்று பதக்கபட்டியலில் இந்தியா 22 தங்கம்,34 வெள்ளி, 39 வெண்கலம் என 95 பதக்கங்களை குவித்து 4-வது இடத்தில் தொர்ந்து நீடித்தது.

இன்னும் 2 நாட்கள் போட்டி உள்ளதால் இந்திய அணி 100-க்கும் மேற்பட்ட பதக்கங்களை குவித்து சாதனை படைப்பது உறுதியாகி உள்ளது. கபடியில் 2 பதக்கம், வில்வித்தையில் 3 பதக்கம், பாட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவில் பதக்கம், ஆடவர் கிரிக்கெட்டில் பதக்கம்ஆகியவற்றை இந்தியா கைப்பற்றுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவை தவிர, இந்திய மகளிர் ஹாக்கி அணி வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் விளையாட உள்ளது. மல்யுத்தத்தில் 4 பேர் கலந்து கொள்ளும்போட்டியும் இருக்கிறது.

ஆசிய விளையாட்டு வரலாற்றில் அதிகபட்சமாக 2018-ல் ஜகார்த்தாவில் நடந்த போட்டியில் இந்தியா16 தங்கம், 23 வெள்ளி, 31 வெண்கலத்துடன் 70 பதக்கங்கள் வென்றது. தற்போது முதல்முறையாக 100 பதக்கங்களுக்கு மேல் வென்று சாதனை படைக்க உள்ளது.

## ஈரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சமூக ஆர்வலர் நர்கீஸ் முகம்மதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு



நர்கீஸ் முகம்மதி

**ஓஸ்லோ:** ஈரானைச் சேர்ந்த பெண் சமூக ஆர்வலர் நர்கீஸ் முகம்மதி அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சுவீடனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஆல்பிரட் நோபல் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர். குறிப்பாக டைனமைட் என்ற வெடிபொருளை கண்டுபிடித்து உலக புகழ் பெற்றார். ஆனால், டைனமைட் வெடிபொருளால் பெரும் பாதிப்பு ஏற்படுவதை கண்டு வேதனை அடைந்தார். இவரது சகோதரர் இறந்த போது, ஆல்பிரட் நோபல்தான் இறந்து விட்டார் என்று நினைத்து, 'மரண வியாபாரி மரணம்' என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அதன்பின், தனது சொத்துகள் அனைத்தையும் சமூக மேம்பாட்டுக்கு சிறந்த பங்களிப்பை வழங்குபவர்களுக்கு விருதாக வழங்கும்படி உயில் எழுதி வைத்தார்.

அதன்படி ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளில் சாதனைபடைப்பவர்களுக்கு நோபல் பரிசுவழங்கப்படுகிறது. ஐந்து பரிசுகள்மட்டும் சுவீடனில் வழங்கப்படுகின்றன. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயின் ஓஸ்லோ நகரில் வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2023-ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் கடந்த2-ம் தேதி முதல் அறிவிக்கப்பட்டுவருகின்றன. ஏற்கெனவே மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுவிட்டன.

இந்நிலையில் அமைதிக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது. ஈரான் நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகளுக்கான பெண்சமூக ஆர்வலர் நர்கீஸ் முகம்மதிஅமைதிக்கான நோபல் பரிசுக்குதேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**31 ஆண்டுகள் சிறை தண்டனை:** ஈரானில் சமூக மாற்றங்களுக்காக தொடர்ந்து போராடி வருபவர் நர்கீஸ். இதுவரை 13 முறை அவரை கைது செய்துள்ளனர். ஐந்து முறை சிறையில் அடைக்கப்பட்டார். அத்துடன் 31 ஆண்டுகள் சிறை மற்றும்154 கசையடியும் இவருக்கு தண்டனையாக வழங்கப்பட்டன. பெண்களை ஒடுக்குமுறைக்கு ஆளாக்குவதை எதிர்த்து போராடியவர். அவர் தற்போதும்

டெஹ்ரானில் உள்ள சிறையில் இருக்கிறார். அனைவருக்கும் சுதந்திரம், பெண்கள் முன்னேற்றம், மனித உரிமைகள் போன்றவற்றுக்காக துணிச்சலாக குரல் கொடுத்து வருகிறார். பெண்ணுரிமை, மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் போன்றவற்றுக்காக அவர் தொடர்ந்து குரல் கொடுத்தார். அதற்காக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது என்று தேர்வு குழு தெரிவித்துள்ளது.

ஈரானில் பெண்கள் தொடர்ந்து அடக்குமுறைக்கு ஆளாகி வருகின்றனர். பொதுவெளியில் சரியாக ஆடை அணியவில்லை என்று மெஹ்சா அமினி என்ற குர்திஷ் இனஇளம்பெண்ணை, ஈரான் போலீஸார் கைது செய்து சித்ரவதை செய்தனர். போலீஸ் காவலில் அவர்உயிரிழந்தார். இதை கண்டித்து ஈரானில் பெரும் போராட்டம் வெடித்தது. இந்நிலையில் ஈரானைச் சேர்ந்த சமூக ஆர்வலர்நர்கீஸ் முகம்மதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது

EVA STALIN IAS